tanks, pipe lines, extensions and ground level reservoirs of Nagercoil. Thackalay and Kuzhithurai subdivisions. It is reported that no major irregularities were noticed by the Superintending Engineer (Highways and Rural Works) both during inspection and perusal of records.

அமெரிக்காவிலிருந்து கோதுமை அன்பளிப்பு

*366 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் சர்வோதய இயக்கத்தினருக்கு அமெரிக்காவிலிருந்து கோதுமை நன்கொடையாகத் தரப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அக்கோதுமை எந்த அடிப்படையில் விநியோகிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இனம், சமயம், வகுப்பு என்ற வேறுபாடு கருதாமல் ஏழைகளுக்கும் தேவையுள்ளோர்க்கும் சர்வோதய இயக்கத்தினரால் கோதுமை விநியோகிக்கப்படுகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவரவர்களே, அமெரிக்காவிலிருந்து வருகிற கோதுமையை பெறுவதால், அமெரிக்காவுக்கு வால் பிடிக்கிறார்கள் சர்வோதயக்காரர்கள் என்று சில பத்திரிகைக் காரர்கள் எழுதக் கூடும் அல்லவா ? ஆகவே, அந்த டொனேஷனை ஏற்றுக்கொள்ளாமல், மறுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது எப்போதிருந்தோ வருகிறது. இப்போது தான் அமெரிக்க அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. சர்வோதயாவுக்கும் அரசாங்கத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, எல்லா வகைகளிலும் அமெரிக்கா தன்னுடைய உதவியை ரத்து செய்து இருப்பதாகத் தெரிகிறது. அதிலே இந்த உதவி அடங்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

டால்மியாபுரத்திலுள்ள அரசு சிமிட்டி தொழிற்சாலை

*367 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டால்மியாபுரத்தில் உள்ள தமிழ்நாடு அரசு சிமெண்ட் தொழிற்சாலையை மூடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

1971 டிசம்பர் 14]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை. முதுவத்தூரிலுள்ள முன்னேடி சிமெண்ட் தொழிற்சாலையை குறைந்த அளவு பணியாளர்களுடன் ஒரு செய்ம்முறை பகுதியாக நடத்துவது என தமிழநாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் செயற்குறிப்பை அரசு அண்மையில் ஏற்றுக்கொண்டது.

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயம்

** 368 வினு*—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, மற்ற இலாகா தொழிலாளர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு பாதுகாப்பு, சலுகை அளிக்கப்பட்டு இருக்கிறபோது நெசவுத் தொழிலாளர்கள், மிகவும் பின் தங்கியவர்கள், சமுதாயத்தில் மிகவும் வறுமையில் வாடுபவர்கள், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க அப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பிரச்னை ஆல் இந்தியா ஹேண்ட்லூம் போர்டால் விவாதிக்கப்பட்டது. இந்தத் தொழில் பெரும்பாலும் டிசென்ட்ரலைசுடு தொழிலாக இருப்பதால், அது தேவை இல்லை என்று முடிவு எடுத்து ஆலோசனை கூறியுள்ளார்கள்.

திரு. எ. க. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெசவு தொழிலாளர்களுக்கு கூலியை நிர்ணயம் செய்வதில் ஏற்படும் சிக்கல்களுக்குக் காரணம், நாட்டில் இருக்கும் நெசவாளர்கள் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்காதது தான் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நெசவாளர்களை ஒன்று சேர்த்து, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள் ஏற்படுத்தி, அதன் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, அவர்களுக்கு நிரந்தரமான வகையில் கூலி நிர்ணயம் செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நெசவாளர்களுக்கு விடப்படும் வேண்டுகோள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, சமீபத்தில் நெசவாளர்கள் கூலி உயர்வு கேட்டு போராட்டங்கள் நடத்தி, கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்களுக்கு கூலி உயர்வு கொடுக்க வேண்டுமென்று முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அந்தக் கூலி உயர்வை எந்தக் கூட்டுறவுச் சொசைடியிலும் கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு அரசாங்கம் சீக்கிரத்தில் உத்தரவு பிறப்பிக்குமா ?